அருண் ஜெட்லி
நாடாளுமன்ற உறுப்பினர்
எதிர்க்கட்சித் தலைவர் (மாநிலங்களவை)

43, நாடாளுமன்ற இல்லம்,
புது டில்லி - 110 001.
தொ.பே. எண்: 23016707, 23034883
ஃபேக்ஸ்: 23793433

டிசம்பர் 5, 2013

செயலாளர் - பொது,
மாநிலங்களவை,
நாடாளுமன்ற இல்லம்,
புது டில்லி - 110 001

ஐயா,

இந்தியாவால் சில நிலப்பகுதிகளைக் கையகப்படுத்தவும், சில நிலப்பகுதிகளை வங்கதேசத்திற்கு விட்டுக்கொடுக்கவும் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான மசோதாவை அறிமுகம் செய்ய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் முயன்று வருகிறார். அதற்கு அரசியல் சட்ட (நூற்றிப் பத்தொன்பது) திருத்த மசோதா, 2013 என்று இலக்கமிடப்பட்டுள்ளது. இந்த மசோதாவை அறிமுகப்படுத்துவதை நான் எதிர்க்கிறேன். இந்த மசோதாவுக்கு எனது எதிர்ப்பானது, அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான இந்திய நாடாளுமன்றத்தின் சட்டரீதியான தகுதி குறித்தும் அதண் மூலம் நிலப்பகுதிகளை மாற்றியமைப்பது சம்மந்தமானது. அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் அதிகாரத்தை சட்டப் பிரிவு 368 கட்டுப்படுத்தியுள்ளது. அரசியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மையை மாற்ற முடியாது என்பதை இது குறிப்பிடுகிறது. 1973க்குப் பிறகு உச்சநீதிமன்றத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை கட்டமைப்பு கொள்கையின் படி, அரசியல் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பில் இந்திய நிலப்பகுதியானது ஒருங்கிணைந்த பகுதியாகும் என்பதே எனது எதிர்ப்பின் அடிப்படை. இந்திய நிலப்பகுதி என்பது அரசியல் சட்டத்தின் அங்கம். அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இதைக் குறைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியாது.

இந்த மசோதாவைக் கொண்டு வருவதை எதிர்ப்பதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

இல்லம்: A-44, கைலாஷ் காலனி, புது டில்லி - 110 048.
தொலைபேசி: 29237483, 29244587, 29248212.
ஃபேக்ஸ்: 29232358.

இணையத்தளம்: http://rajyasabha.nic.in, http://rajyasabhahindi.nic.in